

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம், அவரது இல்லத்தில், விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி, தமது 50வது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்கள் உடன் உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.8.2024) முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவர் என். கண்ணையா அவர்கள் சந்தித்து ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) இடைநுழைவு ஆட்சேர்ப்பு அறிவிப்பைத் திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொண்டு, சமூக நீதியைப் பாதுகாத்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.



## மதுரை கிழக்கு - மேலூர் - சோழவந்தான் சட்டமன்ற தொகுதி

# மதுரை வடக்கு மாவட்டத்தினர் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி வேண்டுகோள்!



மதுரை, ஆக 22 -

மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை கிழக்கு தொகுதி, மேலூர் தொகுதி, மற்றும் சோழவந்தான் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகளில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 18ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர்பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கானவிண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படுவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6, 6 பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குசாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்கு பதிவு அதிகாரி அலுவலகங்களிலும் சேர்க்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 அல்லது 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை கொடுக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதற்காக இணையதள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி, உள்ளிட்ட ஆன்லைன் முறையில் விண்ணப்பி க்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப்பணிகளில் மதுரை வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் பி.எல்.ஏ. 2 இணைந்து மேற்கொண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் தீவிரமாக ஈடுபட்டு நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் அவர்களிடம் கழக தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா வழங்கினார்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!



கடந்த 17.08.2024ம் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களுக்கான பொது உறுப்பினர்கள் கூட்டம் முதற்கட்டமாக கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி நடைபெறும். பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| தேதி | நேரம் | ஒன்றியம் | இடம் |
|---|---|---|---|
| 23.08.2024 | மதியம் 12.00 | பொன்னமராவதி வடக்கு, பொன்னமராவதி தெற்கு மற்றும் பொன்னமராவதி பேரூர் | பொன்னமராவதி மீனாட்சி மண்டபம் |
| 23.08.2024 | மாலை 4.00 | திருமயம் வடக்கு, திருமயம் தெற்கு | திருமயம் AKP திருமண மஹால் |
| 23.08.2024 | மாலை 6.00 | அறந்தாங்கி கிழக்கு, அறந்தாங்கி மேற்கு | ஆவணத்தான்கோட்டை SPM மண்டபம் |
| 24.08.2024 | காலை 10.00 | ஆவுடையார்கோவில் வடக்கு, ஆவுடையார்கோவில் தெற்கு | TRP திருமண மண்டபம் |
| 25.08.2024 | பிற்பகல் | ஆலங்குடி தொகுதி | |
| 28.08.2024 | காலை 10.00 | மணமேல்குடி வடக்கு | வசந்த மண்டபம் |
| 28.08.2024 | நண்பகல் 12.00 | மணமேல்குடி தெற்கு | கோட்டைப்பட்டினம், நிஷா மண்டபம் |

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர்
புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.



நெல்லை வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையத்தில் 6 புதிய பேருந்துகளை பல்வேறு வழித்தடங்களுக்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் கொடியசைத்து துவக்கி வைத்தார்.நிகழ்வில் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,தொ.மு.ச மண்டல பொதுச் செயலாளர் தர்மன், தச்சை மண்டல தலைவர் ரேவதி பிரபு, மாநகர துணைச் செயலாளர் சுதா மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் கோகுலவாணி கந்தன், மன்சூர், மாரியப்பன், அலிஷேக் மன்சூர், ரசூல்மைதீன், டாக்டர் சங்கர்,சகாய ஜூலியட், பேச்சியம்மாள்,மற்றும் அப்துல் சுபஹானி, காசிமணி, ஆனந்த் சுடலைக்கண்ணு, சாய்பாபா கால்வாய் துரைபாண்டியன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## திருமங்கலம் - திருப்பரங்குன்றம் - உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதிகளில்

# மதுரை தெற்கு மாவட்டத்தினர் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வேண்டுகோள்!



மதுரை, ஆக 23 -

மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருமங்கலம் தொகுதி, திருப்ப ரங்குன்றம் தொகுதி, மற்றும் உசிலம்பட்டி தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகளில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 18ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர்பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் வரைவு பட்டியல் அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படுவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6, 6 பி, 7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குசாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்கு பதிவு அதிகாரி அலுவலகங்களிலும் சேர்க்கலாம். பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 அல்லது 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை கொடுக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இதற்காக இணையதள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி, உள்ளிட்ட ஆன்லைன் முறையில் விண்ணப்பி க்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இப்பணிகளில் மதுரை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள் அந்தந்த வாக்குச் ச்சாவடி நிலை முகவர்களுடன் பி.எல்.ஏ. 2 இணைந்து மேற்கொண்ட பணிகளை உடனடியாக முழு அளவில் தீவிரமாக ஈடுபட்டு நிறை வேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஆலவயல் சுப்பையா
## ஆகஸ்ட் 23 (2020)



**கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மாவட்டப் பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருமயம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும், மாவட்ட திருக்கோவில்கள் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**